# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 21/2024
Prosecution Witness -P.W. 16

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திரு. திருமுருகன் |
| Father's Name | : | Asuvathaman |
| Village | : | Kailasapuram |
| Taluk | : | Melur |
| Caste | : | Thevar |
| Calling | : | Inspector of Police |
| Religion | : | Hindu |
| Age | : | 40 |
| Date | : | 12.07.2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.07.2024.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

<u>12.07.2024</u>

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். முன்பு வடசேரி காவல் நிலையத்தில் கடந்த 28.08.2023 ஆம் தேதி காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது அன்றைய தினம் 22.00 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயராஜன் என்பவர் கிருஷ்ணன்கோவிலை சேர்ந்த ராஜகோபால் என்பவரிடமிருந்து பெற்ற புகாரின் தன்மைக்கேற்ப பதிவு செய்திருந்த நிலைய குற்ற எண். 120/2023 பிரிவு 294 (b), 324, 302 இ.த.ச. வழக்கின் முதல் தகவல் அறிக்கையினை காவல் நிலையத்தின் முன்பிருந்து

மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளரிடமிருந்து பெற்று, 23.00 மணியளவில் வழக்கின் சம்பவ இடமான கிருஷ்ணன்கோவில் வடக்கு ரத வீதியில் தெப்பகுளத்தின் தென் மேற்கு ஓர சந்தின் அருகே சென்று அங்கிருந்த மின் விளக்கு மற்றும் என்னிடமிருந்த டார்ச் லைட் வெளிச்சத்தில் சாட்சிகள் நாகராஜன் மற்றும் ராஜா ஆகிய இருவர் முன்னிலையில் பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 2 ஆவணம் அந்த பார்வை மகஜர் தான். என்னிடம் காட்டப்படும் வரைபடம் நான் தயார் செய்ததுதான். அது அ.சா.ஆ. 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவ இடத்தில் காணப்பட்ட Mass Medi என குறியீடு செய்யப்பட்ட ஒரு ஜோடி செருப்பையும் M mart என்ற குறியீடு செய்யப்பட்ட ஒரு ஜோடி செருப்புகளையும் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயாரித்து 23.50 மணியளவில் கைப்பற்றினேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 3 அந்த அத்தாட்சிதான். என்னிடம் காட்டப்படும் செருப்புகள் நான் அப்போது கைபற்றியவைதான். அவை ஏற்கனவே சா.பொ. 6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். சம்பவ இடத்தில் சாரல் மழை லேசாக பெய்து கொண்டிருந்ததின் காரணமாக அவ்விடத்தில் இரத்தக் கறை எதுவும் காணப்படவில்லை. அதனால் சம்பவ இடத்திலிருந்து இரத்தம்படிந்த மண் எதையும் கைப்பற்ற இயலவில்லை. மேற்படி சாட்சிகள் இருவரையும் விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்னர் தொடர்புடைய சாட்சிகளான ராஜகோபால், சண்முக கிருஷ்ணா என்ற கிஷோர், அரவிந்த், ஸ்ரீகுமாரன் ஆகியோரையும் தனித்தனியே விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களையும் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் இறந்துபோன மனோஜ் என்பவரின் பிரேதம் இருந்த வெட்டூர்ணிமடம் சத்தியம் மருத்துவமனைக்கு சென்று, மேற்படி பிரேதத்தின் மீது அதிகாலை 2.00 மணி முதல் 3.30 மணி வரை சாட்சிகள் முருகன் மற்றும் வினு ஆகியோர் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை

அறிக்கை தயார் செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த பிரேத விசாரணை அறிக்கைதான். அது அ.சா.ஆ. 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்தவரின் உடலில் காணப்பட்ட ரத்தக்கறை படிந்த கருப்பு நிற ஜீன்ஸ் பேண்ட் ஒன்று, ரத்தக்கறை படிந்த நீல நிறத்தில் கருப்பு கட்டம் போட்ட சட்டை ஒன்று ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 3.45 மணியளவில் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சியில் மேற்படி சாட்சிகளின் கையொப்பங்களை பெற்றேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 4 அத்தாட்சி அந்த அத்தாட்சிதான். அதில் சாட்சி கையொப்பம் செய்துள்ள முருகனின் மகன் தான் மற்றொரு சாட்சி கையொப்பம் செய்துள்ள வினு ஆகும். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 4 மற்றும் 5 ஆகியவை இறந்தவரின் உடலில் இருந்து நான் கைப்பற்றிய உடைகள் தான். பின்னர் பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் மதியழகன் என்பவர் மூலமாக வேண்டுகோள் கடிதத்துடன் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 16 ஆவணம் அந்த வேண்டுகோள் கடிதம்தான். பின்னர் மேற்படி பிரேத விசாரணை சாட்சிகளையும், வழக்கு பதிவு செய்த ஜெயராஜன் என்பவரையும் தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்பு இவ்வழக்கின் எதிரியை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டியது அவசியம் என நான் கருதியதால் எதிரியை கைது செய்ய வேண்டி, நான் தேடி வந்த நிலையில் எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி 29.08.2023 ஆம் தேதி காலை 8.00 மணியளவில் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் பஸ் ஸ்டாப் அருகில் நின்ற ஆஜர் எதிரி பேச்சி என்ற இசக்கி முத்துவை காரணம் கூறி கைது செய்தேன். அவரை விசாரித்தபோது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவரை அவ்விடத்திலேயே திரேக பரிசோதனை செய்த போது இடது காலின் பின்பகுதியில் சிதைந்த காயமும், இடது கால் பெருவிரலில் சிராய்ப்புக் காயமும், இடது கையில் வெட்டுக்காயமும், உயிருக்கு ஆபத்தற்ற உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு

செல்ல வேண்டிய அவசியமல்லாத லேசான காயங்கள் காணப்பட்டன. அவ்விடத்தில் அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க தயாராக இருந்த நிலையில் நான் பதிவு செய்வதற்கான போதிய உபகரணங்கள் இல்லாததால் கிருஷ்ணன்கோவில் அருகே உள்ள வடசேரி காவல் நிலையத்திற்கு எனது போலீஸ் வாகனம் மூலமாக காலை 10.00 மணியளவில் கொண்டு வந்தேன். கைது செய்த போது எதிரியிடமிருந்த வழக்குச் சொத்தான TN 74 AZ 9735 ஹோண்டா டியோ இரு சக்கர வாகனத்தை காவலர் மூலமாக காவல் நிலையம் கொண்டு வந்தேன். பின்னர் எதிரியை வழக்கு சம்பந்தமாக எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ, ஆசை வார்த்தைகளோ இன்றி விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து சாட்சிகள் செல்வகுமார் மற்றும் உதயகுமார் ஆகியோர் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 10.15 மணியளவில் பதிவு செய்தேன். அதில் எதிரி இறந்துபோன மனோஜ் என்பவரை ஸ்க்ரூடிரைவரால் குத்தி கொலை செய்ததை ஒப்புக் கொண்டதுடன் தன்னை அழைத்துச் சென்றால் சம்பவத்திற்கு பயன்படுத்திய இரு சக்கர வாகனத்தையும் மற்றும் வடசேரி ரயில்வே ஆராட்டு ரோடு, ரயில்வே கேட் அருகே முட்புதரில் மறைத்து வைத்துள்ள அவருக்கு மட்டுமே தெரிந்த இடத்திலிருந்து ஸ்க்ரூடிரைவர் மற்றும் கத்தியினை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியிடமும், மேற்படி சாட்சிகளிடமும் கையொப்பம் பெற்றேன். பின்னர் எதிரி அடையாளம் காட்டி ஆஜர் செய்த அவரது இரு சக்கர வாகனத்தை காலை 11.30 மணியளவில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியின் மூலம் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சியில் எதிரி மற்றும் மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அ.சா.ஆ. 7 அந்த அத்தாட்சிதான். பின்னர் எதிரி மற்றும் மேற்படி சாட்சிகளை அழைத்துக் கொண்டு எதிரி அடையாளம் காட்டிய ஆராட்டு ரோடு, ரயில்வே டிராக் அருகே ஒரு முட்புதரில் இருந்து எடுத்து ஆஜர் படுத்திய ஸ்க்ரூடிரைவர் மற்றும் கத்தியை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மூலமாக கைப்பற்றினேன். அந்த

அத்தாட்சியில் எதிரி மற்றும் சாட்சிகளின் கையொப்பத்தை பெற்றேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 8 ஆவணம் அந்த அத்தாட்சிதான். என்னிடம் காட்டப்படும் சா.பொ. 1 ஸ்க்ரூடிரைவர் மற்றும் சா.பொ. 2 கத்தி ஆகியவை அப்போது கைப்பற்றியதுதான். கைப்பற்றிய வாகனம் ஏற்கனவே சா.பொ. 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்கு சொத்து மற்றும் சாட்சிகளுடன் 12.30 மணிக்கு நிலையம் திரும்பி வந்து, மேற்படி சாட்சிகளை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்னர் எதிரிக்கு ஏற்பட்ட காயத்திற்கு ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு மாலை 7.20 மணிக்கு கொண்டு சென்று, உரிய சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தேன். அப்போது நானும் சென்றிருந்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அப்போது சிகிச்சை அளித்த மருத்துவர் அளித்த அறிக்கை. அது அ.சா.ஆ. 19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (Crl.M.P. No. 2792/2024 ல் நாள் 02.07.2024 அன்று இடப்பட்ட உத்தரவின் அடிப்படையில் ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது). பின்னர் எதிரியை குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.II, நாகர்கோவிலுக்கு காவலர் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் அத்தாட்சி மூலம் கைப்பற்றி வழக்குச் சொத்துக்களான இரண்டு ஜோடி செருப்புகளை படிவம் 95 மூலம் அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அது அ.சா.ஆ. 20 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்தவரின் உடலில் இருந்த ஆடைகளை மற்றொரு படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அது அ.சா.ஆ. 21 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி பயன்படுத்திய ஹோண்டா டியோ TN 74 AZ 9735 இரு சக்கர வாகனத்தை மற்றொரு படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அது அ.சா.ஆ. 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி எடுத்து ஆஜர் செய்த ஸ்க்ரூடிரைவர் மற்றும் கத்தியை மற்றொரு படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அது அ.சா.ஆ. 23 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனையின் போது இறந்தவரின் உடலில் இருந்து

கைப்பற்றப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை தொடர்புடைய நீதிமன்ற பாதுகாப்பில் இருந்த வழக்குச் சொத்துக்களையும், குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.II, நாகர்கோவில் மூலமாக திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பி வைத்தேன். பிரேத பரிசோதனையின் போது வீடியோ பதிவு செய்யப்பட்ட Memory Card Chip ஐ வேண்டுகோள் கடிதம் மூலம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.II, நாகர்கோவிலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இவ்வழக்கில் துரித முதல் தகவல் அறிக்கை கொண்டு சென்ற காவலர் சதீஷ் என்பவரையும், சத்தியம் மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு Intimation கொடுத்த மருத்துவர் திரு. பிரபாகரன் என்பவரையும் பிரேத பரிசோதனையினை போட்டோ மற்றும் வீடியோ எடுத்து, அதற்கான இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(b) சான்றிதழ் வழங்கிய காவலர் பாரதி என்பவரையும், பின்னர் சம்பவ நேரத்தின்போது சம்பவ இடத்தில் மின் விநியோகம் குறித்த விவரங்களை கூறிய சாட்சி பிஜு என்பவரையும் தனித்தனியே விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் இறந்து போனவரின் பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெற்றேன். அ.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அந்த அறிக்கையில் The deceased would appear to have died of shock and haemorrhage due to punctured laceration to the neck and corresponding internal injuries என மருத்துவர் சான்று வழங்கியிருந்தார். அந்த மருத்துவரான திரு. பெஞ்சமின் ஜெபராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் இறந்து போனவரின் உடல் உள்ளுறுப்புகளையும், தொடர்புடைய வழக்குச் சொத்துக்களையும் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்த நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் மதியழகன் என்பவரை விசாரித்து அவர் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். மேற்படி ஆய்வகத்திலிருந்து பரிசோதனை அறிக்கைகள் கிடைக்கப்பெற்றன. உடல் உள்ளுறுப்புகளின் இராசயான பரிசோதனை அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ. 14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

என்னிடம் காட்டப்படும் ஆவணம் இறந்து போனவர் அணிந்திருந்த உடைகள் மற்றும் கைப்பற்றப்பட்ட கத்தி மற்றும் ஸ்க்ரூடிரைவர் ஆகியவற்றை பரிசோதனை செய்து அவர்கள் அளித்த அறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான். அது அ.சா.ஆ. 24 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் வட்டார தடய அறிவியல் ஆய்வகம், திருநெல்வேலியிலிருந்து வழக்குச் சொத்துக்களை மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு குறுதியியல் அறிக்கைப் பெறுவதற்காக அனுப்பி வைத்ததை காட்டும் கடிதம். அது. அ.சா.ஆ. 25 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து இரத்தம் தோய்ந்த வழக்குச் சொத்துக்களை பரிசோதனை செய்து இறந்து போனவரின் உடைகள் மற்றும் ஸ்க்ரூடிரைவரில் தோய்ந்திருந்த ரத்தம் மனித ரத்தம் எனவும் அது A வகை எனவும், கத்தியில் தோய்ந்திருந்த ரத்தம் மனித ரத்தம் எனவும் ஆனால் என்ன வகை என கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் கொடுத்த அறிக்கை. அது அ.சா.ஆ. 26 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தடய அறிவியல் அறிக்கை பெற்ற பிறகு பிரேத பரிசோதனை மருத்துவர் திரு. பெஞ்சமின் ஜெபராஜ் இறந்த நபரின் இறப்புக் காரணம் குறித்து இறுதியறிக்கை கொடுத்தார். அதில் எத்தில் ஆல்கஹால் மற்றும் வேறு விஷம் எதுவும் காணப்படவில்லை எனவும் உடல் உள்ளுறுப்புகளை பரிசோதனை செய்ததின்பேரில் தடய அறிவியல் ஆய்வகத்தால் கொடுக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் ஏற்கனவே அவர் இறப்பு குறித்தான கொடுத்த காரணத்தையே தனது இறுதியறிக்கையிலும் கொடுத்திருந்தார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த அ.சா.ஆ. 15 இறுதியறிக்கைதான். பின்பு தடய அறிவியல் அறிக்கைகள் வழங்கிய அறிவியல் அலுவலர்களான செல்வி. தன்யா மற்றும் திரு. வெங்கடேஷ் ஆகியோரையும் தொடர்புடைய சாட்சியான அஜய் என்பவரையும் விசாரித்து பிறகு சாட்சி ராஜகோபால் என்பவரையும் மறு விசாரணை செய்து அவர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டிருந்த பிரிவுகளை

வழக்கின் தன்மைக்கு ஏற்ப சட்ட பிரிவு மாறுதல் செய்து 294(b) மற்றும் 302 இ.த.ச என குற்ற மாறுதல் அறிக்கை தயார் செய்து குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.II, நாகர்கோவிலுக்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த சட்ட பிரிவு மாறுதல் அறிக்கைதான். அது அ.சா.ஆ. 27 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக 294(b), 302 இ.த.ச. பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். கைது செய்யும்போது எதிரியின் இடது கால் மற்றும் இடது கையில் இருந்த காயங்கள் கண்ணுற்ற சாட்சியங்கள் கூறியதின் அடிப்படையில் இறந்து போன மனோஜ் கத்தியால் தாக்கியதில் ஏற்பட்டதாக தெரியவந்தது. அவருடைய இடது கால் பெருவிரலில் இருந்த காயம் அவர்களுக்கிடையில் நடந்த தள்ளு முள்ளில் ஏற்பட்டதாக தெரிய வந்தது.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

எதிரி இலவச சட்ட உதவி மையத்தினால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞரை மாற்றி விட்டதாகவும், தான் தனியார் வழக்கறிஞர் வைத்துள்ளதாகவும் கூறி, இன்றைய தினம் வழக்கறிஞர்கள் புறக்கணிப்பு காரணமாக அவருடைய வழக்கறிஞர் வர இயலவில்லை என்றும் கூறி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க கேட்டார். எதிரிக்கு தகுந்த வாய்ப்பளித்து அதன் பிறகே சாட்சி விசாரணை செய்யப்பட்டு வருவதால் அவருடைய கோரிக்கை நிராகரிக்கப்பட்டு சாட்சியின் விசாரணை முடிக்கப்பட்டது.